திருக்கழுக்குன்றம் பேரூரில் நாடாளுமன்ற தேர்தல் பரப்புரையின் தொடக்கமாக "இல்லம் தோறும் ஸ்டாலினின் குரல் திண்ணை பிரச்சாரத்தினை வீதி வீதியாகச் சென்று துண்டு பிரசுரங்களை குறு,சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கி தொடங்கி வைத்தார். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், ஒன்றியச் செயலாளர் வீ.தமிழ்மணி, ஒன்றியக்குழு தலைவர் டாக்டர் ஆர்.டி.அரசு, பேரூர் செயலாளர் டி.யுவராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

நீலகிரி மாவட்டம் உதகை கூடுதல் படகு இல்லம் வளாகம் பகுதியில் நடைபெற்று வரும் சுற்றுலா வளர்ச்சி கழக அலுவலகம்,மரவீடுகள், கூடார வீடுகள்,சாகச விளையாட்டு தளங்கள் போன்ற பல்வேறு கட்டுமான பணிகளை சுற்றுலா துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு செய்தார். உடன் சுற்றுலா துறை அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

தமிழ்க் கடவுள் முருகப்பெருமானுக்குப் புகழ் சேர்க்கும் வகையில்

பழனியில் 'அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு' நடத்தப்பட உள்ளது!

ஆய்வுக் கூட்டத்திற்கு பின் அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை,பிப்.29-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தலைமையில் நேற்று (28.02.2024) ஆணையர் அலுவலகத்தில் இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள், சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த 30வது மாதாந்திர சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்ற பின், இந்து சமய அறநிலையத் துறையின் அனைத்து நிலை அலுவலர்கள் பங்கேற்கும் 30 - வது சீராய்வுக் கூட்டத்தில் சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்தும், முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழுவின் இரண்டாவது கூட்டத் தீர்மானங்களை நிறைவேற்றிட மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

கடந்த ஆட்சிக் காலத்தில் இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழு அமைக்கப்படவே இல்லை. ஆனால், முதலமைச்சர் ஆட்சி பொறுப்பேற்றவுடன் ஆலோசனைக் குழுவிற்கு உறுப்பினர்களாக ஆதீன பெருமக்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் நியமிக்கப்பட்டு, 2022 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் கூட்டமும் நடத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து நேற்றைய தினம் நடைபெற்ற இந்து சமய அறநிலையத்துறை ஆலோசனைக் குழுவின் இரண்டாவது கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. மேலும், முதலமைச்சர் அவர்களால் இரண்டாவது கட்டமாக திருக்கோயில்களின் தலவரலாறு, தலபுராணங்கள், நாட்டுடைமையாக்கப்பட்ட பக்தி இலக்கியங்கள், பழமையான அரிய நூல்களை புதுப்பொலிவுடன் மறுபதிப்பு செய்யப்பட்ட 108 அரிய பக்தி நூல்கள் வெளியிடப்பட்டன.

கிராமப்புற திருக்கோயில்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்கு வழங்கப்பட்டு வரும் நிதியுதவி ரூ.2 லட்சத்தை ரூ.2.5 லட்சமாக உயர்த்தி வழங்கிடவும், சட்டப்பிரிவு 49(i) ன் கீழ் வருகின்ற நிதிவசதியில்லாத திருக்கோயில்களில் திருப்பணி செய்திடும் வகையில் முதற்கட்டமாக 500 திருக்கோயில்களில் அரசு நிதி மற்றும் துறை நிதியின் மூலம் திருப்பணிகள் மேற்கொள்ளவும், இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகத்திலுள்ள 14 சமணத் திருக்கோயில்களை புனரமைக்க எந்த ஆட்சியிலும் நடவடிக்கை மேற்கொள்ளாத நிலையில் தற்போது ரூ.5 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவும், திருக்கோயில் அர்ச்சகர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ரூ.20 கோடி மதிப்பீட்டில் 100 புதிய குடியிருப்புகள் உருவாக்கிடவும், திருக்கோயில்களில் தொடர்ந்து 5 ஆண்டுகள் பணியாற்றிய 500 தற்காலிக பணியாளர்களை பணி வரன்முறை செய்திடவும், பதிப்பகப் பிரிவின் மூலம் வெளியிடப்பட்டுள்ள 216 அரிய பக்தி நூல்களை உலகெங்கிலுமுள்ள ஆன்மீக அன்பர்கள் படித்து பயன்பெறும் வகையில் மின் நூல்களாக (EBook) வெளியிடவும், ஏற்கனவே, 103 திருக்கோயில்களில் உள்ள புத்தக

விற்பனை நிலையங்கள் செயல்பட்டு வரும் நிலையில் கூடுதலாக 100 புத்தக விற்பனை நிலையங்களை ஏற்படுத்தவும், தமிழ் கடவுளான முருகப்பெருமானின் புகழுக்கு புகழ் சேர்க்கின்ற வண்ணம் உலகெங்கும் இருக்கின்ற முருக பக்தர்கள் ஒன்றுகூடி பல முக்கிய நிகழ்வுகளை மேற்கொள்ளும் வகையில் பழனியில் அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு நடத்துவதென்றும் நேற்றைய ஆலோசனைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மேலும், 45,477 திருக்கோயில் பணியாளர்களுக்கு ஆண்டிற்கு ஒருமுறை கட்டணமில்லா முழு உடற்பரிசோதனை திட்டத்தை செயல்படுத்திடவும், கிராம தெய்வ வழிபாட்டை ஆன்மிக அன்பர்கள் அறிந்து கொள்ளும் வகையில் அத்திருக்கோயில் வரலாற்றை தொகுத்து புத்தகமாக வெளியிடவும் முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார். இந்த 10 தீர்மானங்களை நிறைவேற்றிட மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இன்றைய கூட்டத்தில் கலந்தாய்வு செய்யப்பட்டது.

இந்த அரசு பொறுப்பேற்றபின், காலிப்பணியிடங்களை நிரப்புதல், உரிய காலத்தில் பதவி உயர்வு வழங்குதல் போன்ற பணியாளர்கள் நலன் சார்ந்த பணிகளை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 379 பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதோடு, கருணை அடிப்படையில் துறையில் 24 நபர்களுக்கும், திருக்கோயில்களில் 108 நபர்களுக்கும் பணி நியமன ஆணை வழங்கப்பட்டுள்ளன. மேலும், 713 அலுவலர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. திருக்கோயில்களில் 5 ஆண்டுகள் தொடர்ந்து பணிபுரிந்த 1,289 பணியாளர்கள் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளனர். இன்றைய தினம் இராமேசுவரம், அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயிலில் பணிபுரிந்து பணி காலத்தில் இயற்கை எய்திய 2 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. திராவிட மாடல் ஆட்சியில் திருப்பணிகளும், பக்தர்களுக்கு தேவையான அடிப்படை தேவைகளும் நிறைவேற்றித் தரப்படுவதோடு, பணியாளர்களின் நலன்களும் பாதுகாக்கப்படுகின்றன.

பல்லடத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பாரத பிரதமர் பேசியது குறித்து செய்தியாளர்கள் கேட்டார்கள். திமுகவிற்கு முடிவு எழுதுவோம் என்று சொன்னவர்களின் அரசியல் பாதை முடிவுற்றுயிருக்கிறதே தவிர திமுகவிற்கு இது வரையில் முடிவு என்பதே கிடையாது. இது ஆயிரம் காலத்து பயிர். இந்த கட்சியும், ஆட்சியும் தொடர்ந்து கார் உள்ளளவும், கடல் நீர் உள்ளளவும் இந்த மண்ணிலே இருக்கும்.

ஒன்றிய அரசு தேவையான நிதியை மாநிலத்திற்கு கொடுப்பதே இல்லை. வஞ்சிக்கிறது என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. மிக்ஜாம் புயல் மற்றும் கனமழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரையில் மத்திய அரசிலிருந்து ஒரு ரூபாய் கூட நிவாரணமாக வழங்கப்படவில்லை. வஞ்சிப்பது ஒன்றிய அரசு தான். ஒன்றிய அரசு நிதி தராவிட்டாலும் தமிழ்நாடு முதலமைச்சர் மாநிலத்தின் வளர்ச்சி மற்றும் மக்களின் தேவைகளை கருதி மாநில நிதியிலேயே அனைத்து பிரச்சனைகளையும் சமாளித்துக் கொண்டிருக்கின்றார் என்று தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ. குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீதரன், கூடுதல் ஆணையர்கள் அ.சங்கர், திருமதி ந.திருமகள், திருமதி சி. ஹரிப்ரியா, திருமதி மா.கவிதா, தலைமைப் பொறியாளர் பி.பெரியசாமி, மாவட்ட வருவாய் அலுவலர்கள், இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் பொறியாளர்கள் கலந்து கொண்டனர்.

என்.மருதுகணேஷ் பங்கேற்பு!

பெருங்களத்தூர் வடக்கு பகுதி கழக செயல் வீரர்கள் கூட்டம்!

மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

சென்னை, பிப்.29-

தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் வடக்கு பகுதியில் வட்டங்கள் தோறும் செயல்வீரர்கள் கூட்டம் (02032024 சனிக்கிழமை) அன்று காலை மாலை கீழ்கண்ட நேரங்களில் நடைபெறும் நிகழ்ச்சியில் தாம்பரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் என்.மருது கணேஷ் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார்.

இந்நிகழ்ச்சியை பகுதி கழக செயலாளர் - மண்டல குழு தலைவர் டி.காமராஜ் ஒருங்கிணைத்து நிகழ்ச்சியை நடத்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன் .

சனிக்கிழமை காலை 9 மணி 52 வது வட்டம், காலை 10 மணி 51 வது வட்டம், காலை 11 மணி 53 வது வட்டம், மாலை 4 மணி 33வது வட்டம், மாலை 5 மணி 50 வது வட்டம், மாலை 6 மணி 32 வது வட்டம், இரவு 7 மணி 49 வது வட்டம்

நிகழ்ச்சி நடைபெறும் வட்டங்களுக்கு உட்பட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர், பாக ஒருங்கிணைப்பாளர்கள், பாக நிலை முகவர்கள் BLA 2 மற்றும் BLC மாவட்ட மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, கழக முன்னோடிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்திடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில், பகுதி கழக செயலாளர் ஏ.கே.கருணாகரன் தலைமையில், பாக முகவர்கள் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் பகுதி நிர்வாகிகள் எ.வீரபத்திரன், எச்.பாஸ்கரன், சரஸ்வதி சந்திரசேகர், கே.பூபதி. க.ரமேஷ் டி.கார்த்திக் முன்னிலை வகித்தனர். பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி பாக முகவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். நிகழ்ச்சியில் மாநகர பிரதிநிதிகள், வட்ட கழக செயலாளர்கள், பாக முகவர்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.

முதல்வர்- கழகத் தலைவர் பிறந்தநாள் விழாவினை சிறப்பாகக் கொண்டாடுவீர்!

பொறியாளர் அணியின் மாவட்ட / மாநகர அமைப்புகளுக்கு மாநில செயலாளர் எஸ்.கே.பி. கருணா வேண்டுகோள்!

சென்னை, பிப்.29-

பொறியாளர் அணியின் மாநிலச் செயலாளர் எஸ். கே.பி. கருணா விடுத்துள்ள வேண்டுகோள் - வருமாறு:

ஒப்பாரும் மிக்காரும் இல்லாத நமது கழகத் தலைவரின் பிறந்தநாள் விழாவினை வரும் மார்ச் 1 முதல் மார்ச் 31 வரையில் பொறியாளர் அணியின் மாவட்ட / மாநகர அமைப்புகள் சிறப்பாகக் கொண்டாடிடுமாறு பொறியாளர் அணியின் நிர்வாகிகள் அனைவரையும் மாநில பொறியாளர் அணியின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

கழகத் தலைவராக பொறுப்பேற்றதில் இருந்து தொடர்ந்து நமது திராவிட முன்னேற்றக் கழகத்தை வெற்றிப் பாதையிலேயே இட்டுச் செல்லும் உழைப்பாளி நமது தலைவர் தளபதி. ஆட்சிப் பொறுப்பை ஏற்றதில் இருந்து ஒரு நொடி கூட துஞ்சாமல், துவளாமல் மக்கள் பணியினை அவர் ஆற்றிவருவதைக் கண்டு நம் எதிரிகள் கூட வியந்து நிற்கின்றனர்.

மகளிர்க்கு இலவசப் பேருந்து பயணம் அளித்து அவர்தம் வாழ்வில் பொருளாதார ஏற்றம் தந்தது, 1.15 கோடி மகளிர்க்கு உரிமைத் தொகையினை மாதாமாதம் அளித்து அவர்களுக்கு குடும்பத்தில் பொருளாதாரச் சுதந்திரம் பெற்றுத் தந்தது, புதுமைப் பெண் திட்டம் மூலம் அரசுப் பள்ளி மாணவிகளுக்கு உயர்கல்வி பயில மாதாமாதம் 1000 ரூபாய் அளித்து அவர்களை உயர்கல்வி பயில ஊக்குவிப்பது என தமிழ்நாடு மகளிர்கள் அனைவரும் எதிர்காலத்தில் ஏற்றம் பெறத் திட்டங்கள் அளித்த மகத்தான தலைவர் நம் முதல்வர். உலகளாவிய முதலீட்டாளர் மாநாட்டினை திறம்பட நடத்தி, நாட்டிலேயே அதிக அளவிலான தொழில் முதலீட்டினை கொண்டு வந்து சேர்த்த தலைவர் நம் முதல்வர். நான் முதல்வர் திட்டம் மூலம் கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு உயர் தொழில் நுட்பங்களில் பயிற்சி அளித்து, கலை, அறிவியியல் கல்லூரி மாணவர்களுக்குக் கூட லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகளை பெற்றுத் தந்து சாதனை படைத்தவர் நம் தலைவர்.

எதிர்காலத் தமிழ்நாடு எல்லா துறைகளிலும் முன்னேறி, எல்லோருக்கும் எல்லாமும் கிடைத்திட ஓயாமல் உழைத்திடும் ஓய்வறியாச் சூரியனான நம் முதலமைச்சர், கழகத் தலைவரின் பிறந்தநாளினை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள், முதியோர்களுக்கு போர்வை, ஆடைகள், ஆதரவற்றோர் இல்லங்களில் அறுஞ்சுவை உணவுகள் என மக்களுக்குப் பயனுள்ள வகையில் ஒவ்வொரு மாவட்ட பொறியாளர் அணி நிர்வாகிகளும் கொண்டாடிட வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாநில செயலாளர் எஸ்.கே.பி. கருணா கூறியுள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாள்:

மாவட்டந்தோறும் நல உதவிகள்!

கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிக்கை!

சென்னை,பிப்.29-

தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் - கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு சார்பில் மாவட்டந்தோறும் ஏழை, எளிய மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாடி மகிழ்ந்திடுவோம்"

கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர் கான் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தமிழ் - தமிழ்நாடு காத்திட அயராது உழைத்து வரும் ஒப்பற்ற தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளான மார்ச் 1 மிகுந்த எழுச்சியோடு கொண்டாடுகிற வகையில், கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் சார்பாக மாவட்டந்தோறும் ஏழை, எளிய மற்றும் மாற்றுத்திறனாளி சகோதரர்களுக்கு உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கிட வேண்டுமென கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர் கான் எம்.எஸ் (ஆர்த்தோ) அறிக்கை விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "எல்லார்க்கும் எல்லாம்" எனும் இலட்சிய இலக்கோடு திராவிட மாடல் அரசின் மூலம் தமிழ்நாட்டினை முன்னோடி மாநிலமாக வீறுநடைபோட செய்யும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளான மார்ச் 1 தமிழ்நாட்டு மக்களின் இதயங்களில் நிறைந்த நாளாக திகழ்ந்து வருகிறது.

கடைக்கோடி சாமானியருக்கும் அரசின் திட்டங்கள் சென்றடைய வேண்டுமென எண்ணற்ற திட்டங்களை வகுத்து, அவர்களின் வாழ்வில் உயர்வு காண உழைக்கும் நம் முதல்வர், அன்றும், இன்றும், என்றும், சிறுபான்மையின மக்களின் உரிமைகளை காத்திடும் ஒற்றை நம்பிக்கையாக திகழ்ந்து வருகிறார்.

2021 சட்டமன்றத் தேர்தலில் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பெற்று சிறுபான்மையின மக்களின் உரிமைகளை வென்றெடுக்க, அவர்களின் கோரிக்கைகளை கனிவுடன் கேட்டறிந்து அதனை திட்டங்களாக அறிவிக்கின்ற சிறுபான்மையின தோழர்களின் ஒரே நம்பிக்கை நம்முடைய முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாளை, கழக மாவட்டந்தோரும் ஏழை, எளிய மற்றும் மாற்றுத்திறனாளி சகோதரர்களுக்கு உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்குவதோடு, பள்ளிவாசல் மற்றும் தேவாலயங்களில் இனிப்புகள் வழங்கி கொண்டாடி மகிழ்ந்திட வேண்டுமென கழக சிறுபான்மையினர் நல உரிமைப்பிரிவின் நிர்வாகிகளை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பாசிசத்தை வீழ்த்தும் இந்தியாவை வென்றெடுக்க இனமான கழகத் தலைவரின் கரங்களை வலுப்படுத்துவோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தேர்தல்:

கேரளாவில் காங்கிரஸ் கட்சி தொகுதி பங்கீடு!

திருவனந்தபுரம், பிப். 29 -

கேரளாவில், மக்களவை தேர்தலுக்கான போட்டியில், ஐக்கிய ஜனநாயக முன்னணியில் இடம் பெற்றுள்ள கூட்டணி கட்சியான காங்கிரஸ் கட்சிக்கு சீட் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

இதனை கேரள சட்டசபை எதிர்க்கட்சி தலைவரான வி.டி. சதீசன் நேற்று கூறியுள்ளார்.

இதுபற்றி செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர்,

கேரளாவில் 20 மக்களவை தொகுதிகளுக்கான போட்டியில் 16 இடங்களில் காங்கிரஸ் போட்டியிடும். கூட்டணியில் 2வது பெரிய கட்சியான இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கிற்கு 2 இடங்களும், கே.சி.ஜே. (ஜே.) மற்றும் ஆர்.எஸ்.பி. ஆகிய இரு கட்சிகளுக்கு தலா 1 இடமும் ஒதுக்கப்பட்டு உள்ளன.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி சமீபத்தில், இந்த முறை தேர்தலில் கூடுதலாக ஒரு தொகுதியை கேட்டு பெறுவோம் என கூறியிருந்தது.

எனினும், இந்த விவகாரம் ஆலோசனை நடத்தி தீர்க்கப்பட்டு விட்டது என சதீசன் கூறினார். இதற்கு பதிலாக, ராஜ்ய சபைக்கு ஒரு தொகுதி ஒதுக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருத்தணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ் சந்திரன் எம்.எல்.ஏ வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் குறித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் தொகுதி பார்வையாளர் மனோகரன் மாநில நெசவாளர் அணி துணைத் தலைவர் ஒ.ஏ.நாகலிங்கம், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் டி.ஆர்.கே.பாபு, ஜி.ரவீந்தீரா, பெ.பழனி, சி.என்.சண்முகம், ஆர்த்தி ரவி, கூளூர் எம்.ராஜேந்திரன், சி.ஜெ.சீனிவாசன், வி. வினோத்குமார், என்.கிருஷ்ணன், டி.பி.சந்திரன், எம்.ஜெ.ஜோதிக்குமார், உள்பட பாகமுகவர்கள் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.